# சுந்தர சொப்பனம்

### உத்வேகமுள்ள உண்மைக்கதை

By : நயீம் சையத்

கூகுல் நிறுவனத்தின் புதிய CEO வுக்கு கொடுக்கப்படும் வருடாந்திர சம்பளம் எவ்வளவு தெரியுமா? $ 50 மில்லியன் அதாவது ஏறத்தாழ 320 கோடி ரூபாய்க்கு சமம். நாம் இதை நினைத்தும் பார்க்க இயலாத ஒன்று, இருப்பினும், இன்று வரை ஒரு கோடி ரூபாயை காணும் பாக்கியம் பெறாதவர்களும் உண்டு. ஆனால் சுந்தர் சாதித்துக்காட்டியது தான் இன்றைய ஒவ்வொரு இளைஞனின் கனவாக உள்ளது.

சுந்தர் பிச்சையை மைக்ரோசாஃப்டுக்கோ அல்லது டுவிட்டருக்கு இழக்க கூகுல் விரும்பவில்லையாம் !!

நாம் சுதந்திரம் அடைந்து 68 வருதங்கள் உருண்டோடி விட்டன. ஆனால், நடுத்தர வகுப்பைச்சார்ந்தோரின் குடும்பக்கதைகள், அதே சோகக்காட்சியைத்தான் பிரதிபலிக்கின்றன. ஒரு சில மற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும், அவைகளை காலத்துடன் ஒப்பிடுகையில் பெருமைப்படும் அளவிற்கு பெரிய மாற்றமாக சொல்ல இயலாது. அக்குடும்பங்கள், இன்றும் ஓரிரு அல்லது கூடிய பட்சம் மூன்று அறைகளே கொண்ட சாதாரண வீடுகளிலிலேயே குடியிருக்கின்றனர். இருக்கும் சம்பாத்தியத்தில் கஷ்டத்துடனேயே காலம் கழிக்கவேண்டியதிருக்கிறது. பள்ளிக்குப்போகும் இரண்டு மூன்று பிள்ளைகளில், ஓரிருவருக்கு, படிப்பில் ஆர்வமோ அக்கறையோ இருப்பதில்லை. தாய் சமைக்கிறாள், பண்ட பாத்திரங்களை துலக்கி, அழுக்கு துணிகளைகளை துவைத்த வண்ணமே இருக்கிறாள். அத்துடன், அவள் தன் முதிர்ந்த மாமனார் மாமியாரை கவனித்துக்கொள்கிறாள். அதாவது, கணவனும் மனைவியும், ஒரு மங்கலான, உலர்ந்த வாழ்க்கையையே வாழ்ந்து வரும் கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டிருக்கின்றனர். விலைவாசிகளும், வியாதிகளும், நேரத்தோடு அவர்களை முதியவராக்கிவிட்டன. ஆனால், அவர்கள் தன் உள்ளங்களின் ஆழ்கடலில் புதைத்து வைத்திருக்கும் ஒரே ஒரு ஆர்வம் மட்டும் என்னவென்றால், தன் பெண் மக்களுக்கு நல்ல குடும்பத்தில் வாழ்க்கை அமைத்துத் தந்துவிடவேண்டும், ஆண் பிள்ளைகளுக்கு நல்ல வருமானமுள்ள வேலை

கிடைத்துவிடவேண்டும் என்பதுதான். இருப்பினும் 90 சதவீத குடும்பங்களின் இந்த சுயநலமற்ற அற்ப ஆசைகளும் நிறைவேறுவதில்லை.

காலப்போக்கில் ஏதாவது மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும், அவைகளை உற்று நோக்கினால், கருப்பு வெள்ளை TV-க்கு பதிலாக கலர் TV இடம் பெற்றிருக்கும், லேன்ட் லைன் டெலிபோனுக்கு பதில் மொபைல் போன் வசதி வந்திருக்கும், ஒரு சைக்கிளின் இடத்தை எதாவது ஒரு மோட்டார் சைக்கிளோ அல்லது ஸ்கூட்டரோ பெற்றிருக்கும். இந்த அற்ப மாற்றங்களும், பையன் நல்ல நம்பர் வாங்கி தேர்ச்சிபெற்றிருந்ததாலோ அல்லது, எதாவதொரு ப்ரொஃபெஷனல் கோர்ஸில் இடம் கிடைத்திருந்ததாலோ தாய் தந்தையின் சிறு சேமிப்பை பலி வாங்கியிருக்கும், அல்லது அவனுக்கு ஏதாவதொரு மல்டி நேஷனல் கம்பெனியில் வேலை கிடைத்திருக்கும், அல்லது அதீகபட்சம் வெளிநாட்டிலிருந்து அழைப்பு வந்து, அங்கே குடிபெயர்ந்திருப்பன். இந்திய நாட்டின் அனைத்து மாகாணங்களிலும், 1970 முதல் சில ஐந்து தசாப்தங்களாக, அநேக குடும்பங்களில் இதே போன்ற மாற்றங்கள் பிள்ளைகளின் கடுமையான உழைப்பினாலும், அவர்களின் நல்ல விதியினாலும், ஏற்பட்டிருக்கின்றன.

சுந்தர் கூட இதே போன்ற ஒரு குடும்பத்தில் தான் தனது கண்களைத்திறந்தான். தென் இந்தியாவில் தமிழ் நாட்டின் தலை நகரமான சென்னையில் ஒரு நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த அவருடைய தந்தை ஒரு கம்பெனியில் மின் பொறியாளராக இருந்தார். வீட்டு வசதியின் பொருட்டு, தாயும் ஒரு அலுவலகத்தில் ஸ்டெனோகிராஃபராக இருந்தார். பெற்றோர் மற்றும் இரு பிள்ளைகளுடன் கூடிய இந்த எளிய குடும்பம், இரண்டே அறைகளைக்கொண்ட ஒரு சிறிய வீட்டில் பல வருடங்களாக வாழ்ந்து வந்தது. பிள்ளிகள் வெளி அறையில் உறங்கும் பொழுது, பெற்றோர் சமயலறையை படுக்க பயன்படுத்தி வந்தனர். வீட்டில், ஒரு TVயோ அல்லது டெலிஃபோனோ இருந்ததில்லை. ஆமாம், 3000 ருபாய் மாத வருமானத்தில் சிறுகச் சிறுக சேமித்து வாங்கிய ஒரு பழைய ஸ்கூட்டர் சுந்தர் உடைய தந்தை தன் வேலைக்காக வைத்திருந்தார். அதன் மூலம் அவர் தன் மனைவியை அவருடைய அலுவலகத்தில் விட்டுவிடுவார். எங்கேயாவது காற்று வாங்க போக எண்ணினால், சுந்தர், அந்த ஸ்கூட்டரின் முன் பகுதியில் நின்றுகொள்ள, பின்புறத்தில் தாயின் மடியில் அவர் தம்பி அமர, நால்வரும் எதாவதொரு முனிசிபல் பார்க்குக்குச் சென்று அங்கே சிறிது நேரம் பிள்ளைகள் விளையாடுவர். அனைவரும் வீட்டின் சமைத்து கொண்டு வந்த இட்லி தோசையுடன் தன் மனங்களை தேற்றிக்கொள்வர். பிள்ளைகளின் கல்விக்கு வீட்டின் அருகிலுள்ள சாதாரண

பள்ளியையே தேர்ந்தெடுத்திருந்தனர். அதீக செலவு செய்து ஆடம்பர பள்ளியில் படிக்க வைக்க அவர்களிடம் போதுமான வசதி இருந்ததில்லை. விட்டிலிருந்து தொலைவில் அனுப்பி சுந்தரை படிக்க வைக்கவும் இயலாதவர்களாகவே இருந்தனர்.

ரகுநாதுக்கும் அவருடைய மனைவி லக்ஷ்மிவுக்கும் தம் வருமான நிலை நன்றாகவே தெரிந்திருந்தது. ஆகவே, அவர்கள், தம் மக்களின் மேல் படிப்பிற்காக சிறிது சேமித்தும் வைத்திருந்தனர். நமக்குள் பிள்ளைகளின் மேல் கல்விக்கு சேகரிக்கும் பழக்கம் மிகவும் குறைவு, ஆகவே, அவசியப்படும் பொழுது, பிள்ளிகளுக்கு உதவ முடிவதில்லை. உற்றார் உறவினர், சொந்த பந்தங்கள், நண்பர்கள் கை கொடுக்கத்தவறினால், கடைசியில் வங்கிகளின் கதவு தட்டவேண்டியதாயிருக்கிறது.

இளைய சுந்தர், ஜவாஹிர் வித்யாலயாவில் 12வது வகுப்பை முடித்தார். நினைவில் நிற்கும்படியாக சுந்தருடைய படிநிலை இருந்ததில்லை. சேட்டை செய்யும் மாணவர்கள் தான் ஆசிரியர் நினைவில் வழக்கமாக நிலைகொண்டிருப்பர். சுந்தர் தானுண்டு தன் படிப்புண்டு என பள்ளி முடிந்ததும் நேராக வீட்டை நோக்கி சென்றுவிடுவார். அவரால் யாருக்கும் எந்த தொல்லையும் இருந்ததில்லை. பள்ளியில் விளையாட பல பொருட்கள் இருந்தும் அவருக்கு அதில் பிரியமில்லை. தோழர்களின் வற்புறுத்தலால், சிறிது அவரிடம் உறவாடிக்கொள்வாரே தவிர, புத்தகங்கள்தான் அவருடைய நண்பர்களாக இருந்தன. தேர்வில் ஏதாவது பாடத்தில் மதிப்பெண்கள் குறைந்து காணப்பட்டால், உடனே ஆசிரியரிடம் சென்று, மதிப்பெண்கள் குறைத்து கொடுக்கப்பட்ட காரணத்தை வாதிட்டு, திருத்திக்கொள்ளும் பழக்கமும் இருந்ததாம். சுந்தருக்கு எண்களின் மீது மிகவும் ஆர்வமிருந்தது. ஒரு நாள் டெலிபோனில் கேட்டு ஒரு நம்பரை மாமிவுக்கு எழுதச்சொன்ன அவர் மாமா, சில மாதங்கள் கழித்து, அதை கேட்கும் பொழுது, மாமி எழுத மறந்து விட்டதாக கூறியபொழுது, சுந்தர் சற்றும் தயக்கமின்றி அந்த டெலிபோன் நம்பரை ஒப்பித்தாராம்.

12-ம் வகுப்பிலிருந்தே IIT யில் சேர ஆயத்தம் ஆய்க்கொண்டிருந்தார் சுந்தரம். அதற்காக அவர் வகுத்துக்கொண்ட டைம் டேபில் படிப்பதைத்தவிர, விளையாட்டுக்கு நேரமே ஒதுக்கப்படாமல் இருந்தது. ஒரு தடவை IITயில் நுழைந்து விட்டால், அவருடைய எதிர்காலம் ஒளிமயமாக இருக்கும் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். அத்துடன், காலம் முழுவதும் இடர்பாடுகளுடன் தன்னை வளர்த்து படிக்க வைத்த பெற்றோர்களுக்கும் சற்று நிம்மதி ஏற்படும். அவர் எந்த பொறியியல் அல்லது மருத்துவ கல்லூரிக்கும் போக விருப்பமில்லை என ஏற்கனவே அறிவித்திருந்தார். IITயின் பட்டம்தான் பெறுவேன் என திட்டவட்டமாக இருந்தார். பெற்றோர்களும் தன்

பிள்ளையின் உயர்ந்த எண்ணங்களை எண்ணி உள்ளுக்குள் மகிழ்ந்தனர். பிள்ளையின் கடுமையான உழைப்பைக் கருத்தில் கொண்டு, எப்படியும் அவன் IITயில் இடம் பிடிப்பான் என நம்பினர். அதே போல் சுந்தர் கரக்பூர் IIT (Kharagpur IIT KGP) யில் சேர்ந்தார். பெற்றோரின் உழைப்பும், சுந்தரின் விடாமுயற்சியும் இன்று தன் நிறத்தை காட்டியது. அவர்கள் எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தனர். சுந்தரை அரவணைத்து, அவருடைய வெற்றி மற்ற நடுத்தர மக்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும் என்பதையும் நம்பினர். கடைசியில், சுந்தர், அருமையான மதிப்பெண்களுடன், IIT பரீட்சையிலும் தேர்ந்தார்.

சுந்தர் உடைய நுண்ணறிவை பாராட்டி, ஒரு முறை அவருடைய ஆசிரியர் ஒருவர் வகுப்பறையில், அவர் பட்டை தீட்டப்படாத வைரம் எனவும் வருங்காலத்தில், தன்னுடையது மட்டமின்றி, அடுத்தவருடைய வாழ்வையும் ஒளிமயமாக்குவார் என வர்ணித்தாராம். நடந்ததும் இது தான். காம்பஸ் இன்டர்வியூவில் சிறந்த நிறுவனங்களின் பல வாய்ப்புகள் கிட்டின. ஆனால் சுந்தருடைய சொப்பனங்கள் வேறு விதமாக இருந்தன. மேற்கொண்டு படிக்க அவர் ஸ்டன்ஃபோர்டு யூனிவெர்சிடிக்கு (Stanford University) விண்ணப்பித்தார். இதில் அற்புதம் என்னவென்றால், அந்த பல்கலைக்கழகத்தில் இடம் மட்டுமின்றி அவருக்கு ஸ்காலர்ஷிப்பும் ஒதுக்கப்பட்டது. இப்பொழுது, ஒருவர் மற்றொருவரை மிஞ்சி சாதனைப்படைக்கும் எண்ணத்துடன், உலகமெங்கிலுமிருந்து சிறந்த நுண்ணறிவாளர்கள் ஒன்று கூடி படிப்பில் ஆக்டிவாக இருக்கும் அப்பல்கலைக்கழகத்தில் சுந்தர் தன் சாதைகளைப்படைத்து வந்தார். அங்கிருந்து பட்டம் பெற்று, MBA பட்டத்திற்கு வார்டன் (Wharton) ஸ்கூல் ஆஃப் யூனிவெர்சிடி ஆஃப் பென்சில்வேனியா (Wharton School of University of California) வில் சேர்ந்தார். பெற்றோர், தன் பிள்ளை படித்துக்கொண்டே காலத்தை கழித்து விடுவானா இல்லை ஏதாவது வேலையும் செய்வானா என கவலைப்பட்டனர். படிக்கும் காலத்திலேயே, மேற்கொண்டு பெற்றோரிடம் பணம் கேட்டு தொல்லைப்படுத்தாமல், சில சிறு வேலைகளை செய்து, தன் தேவைகளைப்பூர்த்தி செய்து வந்தார். வார்டன் (Wharton) ஸ்கூலிலும் அவருக்கு பல பரிசுகள் வழங்கப்பட்டன. அவைகளைப்பற்றி அவர் எவரிடமும் கூறி பெருமைப்பட்டுக்கொள்ளவில்லை. தன் உழைப்பில் கண்ணும் கருத்துமாக இருந்தார். பல பெரிய அமெரிக்க நிறுவனங்களில் வேலை கிடைக்க தொடங்கியவுடன், மற்றவரைப்போல் தன் வீட்டிற்கும் அவர் பணம் அனுப்ப முடிந்தது. அது தான் சாதாரணமாக ஒரு மகன் செய்யக்கூடிய கடமையாக இருந்தது. பல நாட்கள் கழித்து, சுந்தர் கூகுலில் (Google) பணி புரிகிறார் என தெரிய வந்தது. இதை அறிந்த

மக்கள் அவருடைய விடாமுயற்சியை பெரிதும் பாராட்டினர். ஒரு வெளிநாட்டு நிறுவனத்தில் அந்நாட்டை சேர்ந்தவர் மட்டுமின்றி பன்னாட்டு மக்களும் பணிபுரிகின்றனர். ஆகவே, இந்நிறுவனங்களில் பல சமுதாயங்களின் ஒருங்கிணைப்பை காண இயலும். அவ்விடத்தில் அனைவரையும் ஒன்று திரட்டி நடத்துபவரே வெற்றியடைய முடியும். அத்துடன், தன் துறையில் சிறந்து விளங்குவதுடன், ஆங்கிலத்திலும் வல்லவராக இருக்கவேண்டும். இந்த இரண்டு சிறப்பு அம்சங்களும் சுந்தரிடம் இருந்தன. ஆகவே, அவர் வெற்றி மேல் வெற்றியடைந்து வந்தார். பிறகு, சென்ற மாதம் அவரை கூகுல் நிறுவனத்தின் CEOவாக நியமிக்கப்பட்ட செய்தியும் உலகில் பரவியது.

ஒரு நடுத்தர வர்கத்தின் இளைஞன் கண்ட இந்த வெற்றியின் பரிசாக, கற்றறிந்த பெற்றோருக்கு வாகை சூட்டவேண்டுமா அல்லது இந்த பரிசை, அவனுடைய ஆசிரியர் வர்கத்தின் ஒரு பங்காக்க வேண்டுமா? பெற்றோரின் கல்வி, ஊக்கம், நகர சூழ்நிலை, ஆசிரியர்களின் தனிப்பட்ட கவனம், உற்றார் உறவினர் மற்றும் நண்பர்களின் ஆதரவு, மற்றும் கடைசியில், மாணவனின் ஆர்வம், கடின உழைப்பு, ஒரு இலக்கை அடைந்தே தீரவேண்டும் என்ற பித்தம், ஆகியவைதான் ஒரு மாணவனை ஏழ்மையின் காலச் சக்கரத்திலிருந்து விடுவிக்க முடியும், என்று கடந்த நாட்களில் நடத்தப்பட்ட சர்வே ஆய்வுகள் பறைசாற்றுகின்றன. இங்கே சுந்தருடைய வெற்றி அது உண்மையே என மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தியுள்ளது. இன்று தன் பெற்றோர்களை இரண்டு அறைகளே கொண்டிருந்த ஒரு சிறிய வீட்டிலிருந்து சென்னையின் சொகுசான பங்களாவில் குடியேற்றிவிட்டார் சுந்தர். வீட்டிற்கு வெளியே அவர்களின் சேவைக்கு ஒரு சிறந்த காரும் நிறுத்தப்பட்டுவிட்டது. வாழ்க்கைக்குத் தேவையான அத்தனை பொருகளும் வீட்டிற்குள் அமைக்கப்பட்டுவிட்டன. விடுமுறை கழிக்க, வயது முதிர்ந்த பெற்றோர், தன் பேரப்பிள்ளைகளுடன் கொஞ்சி விளையாட, மகனிடம் சென்று விடுவதுண்டு. சுந்தர் அமெரிக்க பிரஜையாக அந்தஸ்துப்பெற்று, தனக்காக, ஒரு சிறந்த வீட்டையும் அமைத்துக்கொண்டார். அங்கே, கரக்பூர் கிலாஸ்மேட் அஞ்சலியை மணந்து கொண்டு சந்தோஷமாக வாழ்ந்து வருகிறார். அவருடைய வருட வருமானம் இந்திய கரன்சியில் ஏறக்குறைய 320 கோடி (அதாவது மாதம் தோராயமாக 26 கோடி ரூபாய்) ஆகிறது. நாம் இதை கற்பனையும் செய்து பார்க்க இயலாது ஒன்று, அத்துடன் நமக்குள் எத்தனை பேர் ஒரு கோடி ரூபாயை காணும் பாக்கியம் பெற்றிருப்போமோ தெரியாது. ஆனால், ஒவ்வொரு இளைஞனுடைய கனவையும் சுந்தர் தனக்காக உண்மையாக்கி காட்டிவிட்டார். இன்று சென்னை பள்ளிகளின் அனைத்து மாணவர்களும் சுந்தருடைய

பெயரை உச்சரித்து, அவர் கண்ட வெற்றியின் பாதையில் தாமும் நடைபோட ஆயத்தம் ஆகிக்கொண்டிருக்கின்றனர்.

ஆசிய கண்டத்தின் மாணவர்களின் வெற்றியினால் அமெரிக்கா ஒன்றும் கோபப்படவில்லை, ஆனால் நிச்சயமாக ஆச்சரியத்தில் மூழ்கியுள்ளது. ஹைதராபாதைச் சேர்ந்த சத்ய நாராயன நாதெல்லா (மைக்ரோசாஃப்ட் CEO) மற்றும் சென்னையைச் சேர்ந்த இந்திர நூயி (பெப்சிகோ CEO) ஆகியோருடன் போதாத குறைக்கு, சுந்தர் பிச்சையும் கூகுலை வென்று விட்டார். நாளைய தினம், வேறு சுந்தர் யாராவது, இரவோடு இரவாக மற்ற அமெரிக்க நிறுவனத்தின் மீது படையெடுத்து, நேற்றைய தினம் வரை, தமது ஆதிக்கத்தில் இருந்து வந்த இந்திய நாட்டில், அசாதாரண திறமைமிக்கவர் பலர் இருப்பதை அவர்களுக்கு உணரவைத்து விடுவார் என்பது சாத்தியமே!!

இதில் துக்கமான செய்தி என்னவென்றால், நம்மவர்களில் அதிகாரத்திலிருப்பவர்களுக்கு இதை உணரும் திறமை கிடையாதே என்பது தான். இன்றும் திறமை மிக்கவரை, பாரபட்சத்துடனும், பிரிஜுடைஸ், நெபோடிஸம் என சொல்லப்படும் சலுகைகளின் கண்ணோக்கத்துடன் நடத்திக்கொண்டு, இந்திய நாட்டு நிறுவனங்களில் தமக்கு வேண்டியவரை நியமித்து, ஜாதி, மத, மாநில வேறுபாட்டின் அடிப்படையில் உயர்ந்த திறமைகளை கொன்று புதைத்து விடுகின்றனர். இதே காரணத்தினால்தான் பல மேதை மாணவர்கள் இந்திய மண்ணை விட்டு அயல் நாடுகளுக்குச் சென்று, அங்கேயே இருந்து விடுகின்றனர். அவர்களின் முன்னேற்றத்திற்குரிய எந்த வசதிகளும் இங்கே கிடைக்காததும் ஒரு காரணம். இச்சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, மறந்து, மன்னித்து, மாணவர்கள், தன் துறைகளில் சிறந்து விளங்கி, தம்மால் இயன்ற அளவிற்கு தமது தாயகத்திற்காக பணி புரிய வேண்டும். நிச்சயம் ஒரு நாள் அவர்களுடைய வண்ணக்கனவுகளும் சுந்தர சொப்பனத்தைப்போல் நனவாகும்.

All rights reserved ©

http://Translation.Shaadmaani.Net